விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | ஆனி 27 | ஷவ்வல 22 | இதழ் 151
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 11-7-1985

## தடுப்புக்காவலிலுள்ள 643 தமிழ் இளைஞர்கள் உடனடி விடுதலை!

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட 643 தமிழ் இளைஞர்கள் உடனடியாக விடுதலைசெய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரக்கூடியவகையில் எவ்வித ஆதாரமும் இல்லாமையின் நிமித்தமே விடுதலைசெய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களம் தகுந்த ஆதாரங்கள் காணப்படாமையால் அநாவசியமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களில் 400 பேரை விடுதலைசெய்யும்படி இருவாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ரா)

இந்த இளைஞர்கள் அனைவரும் இலங்கையின் பல்வேறுபகுதிகளிலும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [ரா]

பூட்டான் பேச்சுக்கள்:

## வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ்ப்பிராந்தியம் அமைப்பதில் கூட்டணி, இயக்கங்கள் உறுதி!

## -'இந்து' தகவல்

(புதுடில்லி)

இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகள் ஒன்றிணைந்த முழுமையான தமிழ்ப் பிராந்தியமொன்றை உருவாக்குவதிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல தமிழ் தீவிரவாதக் குழுக்களும் உறுதியாகவுள்ளன. இதுவிடயத்தில் இவை அனைத்தும் ஒன்றுபட்டு இத் தமிழ்ப் பிராந்தியக் கோரிக்கையை வலுப்படுத்த முடிவு செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டானில் இலங்கைத் தமிழ் அரசியல் குழுக்கள் மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே 'இந்து' பத்திரிகை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'இந்து' மேலும் தெரிவித்திருப்பதாவது: அதிகாரப் பரவலாக்கல் குறித்த யோசனைகள், மற்றும் வடக்கு கிழக்குப் பிராந்திய ஒன்றிணைப்பு ஆகிய விடயங்களே திம்பு சந்திப்பில் சர்ச்சைக்குரியனவாகக் காணப்படுகின்றன இவைசம்பந்தமாகவே இருதரப்பினரிடையேயும் கருத்துவேற்றுமைகள் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக்குழுக்கள் அனைத்தும் வடக்கு கிழக்குப் பகுதிகள் ஒன்றிணைந்த பூரணமான தமிழ்ப் பிராந்தியமொன்றை அனைத்து அதிகாரங்களுடனும் உருவாக்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளன. இது விடயத்தில் இக்குழுக்களிடையே மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது.

இத்தமிழ்ப் பிராந்திய அமைப்பின்மூலமே இனப்பிரச்சினைக்கு தகுந்த தீர்வைக்காண முடியுமெனவும் அவை கருதுகின்றன.

இலங்கை அரசுதரப்புக் குழுவைப் பொறுத்தவரை பூட்டான் பேச்சுக்களில் எதுவித விவாதங்களுக்கும் இடமளிக்க வேண்டாமென இலங்கை அரசினால் அக்குழு கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஒரு காலஎல்லைப்பகுதிக்கு பிராந்திய ரீதியாக அதிகாரத்தைப் பரவலாக்கும் யோசனையை முன்வைக்கவும் இக்குழு யோசித்திருப்பதாகக் கூறப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

## சுகயீனம் மகாநாட்டை குழப்பிவிடாது!

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனவின் சுகயீனம் பூட்டான் பேச்சுக்களை எவ்வகையிலும் பாதிக்க மாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுப் பத்திரிகையாளர் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். [7-ம் பக்கம் பார்க்க]

## ஊரடங்குச்சட்டம் நீக்கம்

[கொழும்பு]

வடபகுதியில் இதுவரை காலம் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இலங்கையின் எப்பாகத்திலும் ஊரடங்குச் சட்டம் இருக்காது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இலங்கை வங்கி அலுவல் நேரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் அலுவல் நேரம் காலை 9 மணியிலிருந்து 12 மணிவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோட்டையிலுள்ள அலுவலகத்தில் பண கொடுக்கல் வாங்கல் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையில் மட்டுமே நடைபெறும் என்று வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## கூட்டறிக்கை வெளியிட இருதரப்பினரும் முடிவு!

(திம்பு)

இலங்கை இனப்பிரச்சினை குறித்து பூட்டான் பேச்சுவார்த்தைகள் அடங்கிய முடிவின இலங்கை அரசுதரப்பினரும், தமிழ் அரசியல் பிரமுகர்களும் கூட்டாக இணைந்து அறிக்கை ஒன்றினை வெளியிடவுள்ளனர்

இந்த அறிக்கையை பூட்டான் செய்தித்துறையின் மூலம் வெளியிட தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரா)

## நல்லமுறையில் முன்னேற்றம்! -'லலித்'

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை குறித்துப் பூட்டானில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவகையில் நடைபெற்றுவருவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் [7-ம் பக்கம் பார்க்க]

## பிரதமர் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு ஜே. ஆர். சுகவீன முற்றிருப்பதால் பிரதம மந்திரி திரு. ஆர் பிரேமதாசா மந்திரிசபை அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஜனாதிபதி ஜயவர்த்தன அடுத்தவாரப்பகுதியில் தமது வழமையான வேலைகளை கவனிப்பார் என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

## பூநகரிப் பகுதியில் இரவுநேரங்களில் பயமுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப்பகுதியில் உள்ள வீடுகளில் இரவு நேரங்களில் அத்துமீறல் செயல்கள் இடம்பெறுவதால் குறிப்பாகப் பெண்கள் அச்சமடைந்த நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது

பூநகரி ஆஸ்பத்திரியில் இரவு நேரங்களில் கடமையிலிருந்த பெண் ஊழியர் சிலரை, அங்கு சென்றவர்கள் மானபங்கப்படுத்த முயன்றதாகவும், அப்பெண் ஊழியர்கள் அச்சமடைந்து வேறிடத்துக்கு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி வில்லடி என்னும் இடத்திலுள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்குச்சென்றவர்கள், கடை உரிமையாளரைத் தாக்கிவிட்டு அவரின் மனைவியை அணுகியபோது அப்பெண் கூக்குரலிட்டுக் கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. (மா)

## இலங்கையரை அகதிகளாக ஏற்க முடியாது! -ஐ நா. அதிகாரி!

(ஜெனிவா)

''195'ம் ஆண்டு சட்டத்தின்படி ஐரோப்பிய நாடுகளுக்கு வந்திருக்கும் இலங்கையரை அகதிகளாக ஏற்றுக் கொள்ளமுடியாது'' என்று அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகர் திரு. போல் மார்ட்டீன் கூறியுள்ளார்

இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் கோரி வந்
(7-ம் பக்கம் பார்க்க)

ப. நோ. கூ. சங்கங்களுக்கு

## கொள்ளையை அறிவிக்கும் சமிக்ஞை மணிகள்!

(நெடுந்தீவு)

கொள்ளைச் சம்பவங்களை அறிவிக்கும் சமிக்ஞை மணிகளைப் பொருத்த விரும்பும் சங்கங்கள், தமக்கு வேண்டிய மின் சமிக்ஞை மணிகளுக்கு விண்ணப்பிக்கும்படி சகல யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களையும் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு க. சண்முகலிங்கம் கோரியுள்ளார்.

இந்த சமிக்ஞை மணியின் ஒலி சுமார் ஐம்பது யார் சுற்றளவிற்கு ஓசை எழுப்பும் என்று சொல்லப்படுகிறது.

## இந்திய போயிங் கறுப்புபெட்டி மீட்பு

(புதுடில்லி)

கடந்த மாதம் 23ம் திகதி அத்திலாந்திக்கில் மூழ்கிய ஏயர் இந்திய போயிங் 'கனிஷ்க'வின் தகவல் பதிவுக் கருவியான 'கறுப்புப்பெட்டி' நேற்று அதிகாலை 2 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது

அத்திலாந்திக்சமுத்திரத்தில் சுமார் 6700 அடி ஆழத்திலிருந்தே இப்பெட்டி மீட்கப்பட் (7-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd ) மொத்த விலை- 7-50 சில்லறை விலை - 8-50. தொடர்புகொள்க: M G M. Forage Stores, 781, K. K. S. Rd and 208, 1st Cross Street, Jaffna. 4289

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவிலடியில் மெயின் வீதியில் வீடு. கிணறுடன் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. நவரட்ணம், அபிவிருத்தி சபை உப அலுவலகம், வட்டுக்கோட்டை. 4346

## விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரி, வீட்டு நிலை கதவு விற்பனைக்குண்டு தொடர்பு: மணியம், 21/2 அம்மன் ரோட், கந்தர்மடம். 4344

கெல்வினேற்றர் பிறிட்ஜ், கலர் ரீ. வி. டெக், வாஷிங் மெஷின் மற்றும் வீட்டுச் சாமான்கள் உடன் விற்பனைக்கு. 15/6, குமாரசாமிவீதி, யாழ்ப்பாணம். 4339

வயலின், புத்தம் புதிய நிலையில் சிறியது, உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ முருகன்ஸ் 140, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 43.2

## வேண்டுகோள்

என்னிடமிருந்து எடுத்துச் சென்ற CD 200 - 88 ஸ்ரீ 4557 சிவப்பு நிற ஹொண்டா மோட்டார் சயிக்கிளைத் தயவு செய்து திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறேன் இன விடுதலைகோரிப் பாடுபடும் சகல தூய உள்ளங்களினதும் கண்ணோட்டத்துக்கு இதனைச் சமர்ப்பிக்கிறேன்

கமலா ஸ்ருடியோ, கிளிநொச்சி — செ. தர்மலிங்கம், (4331)

## 16-ம் நாள் பாச அஞ்சலி



'மெய்கண்டான்'

இரத்தினசபாபதி

தோற்றம்: 05–02–1920

மறைவு: 26–06–1985

"அன்பின் திருவுருவே இன்ப அருட்கடலே!
பண்பின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே! - எம்
குடும்பத்தின் ஒளிவிளக்கே குறைவிலாப் பெருமையனே!
வாடுகின்றார் நின்பிரிவால் உற்றாரும், உறவினரும்!
வாழ்க நின் நாமம் வையகம் உள்ளவரை
அடைகநின் ஆத்மா என்றென்றும் சாந்தி!"

இன்று (11-07-85) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரிகைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

42, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு. 4337

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பொன்னம்மா சரவணமுத்து (சுப்பையா)



மலர்வு: 04–04–1906

உதிர்வு: 22–06–1984

திதி: 11–07–1985

கண்ணை இமை காப்பதுபோல காத்துநின்றாய் - இன்று
எம்மை விட்டு விண்ணுலகம் சென்று விட்டாய்
மண்ணைவிட்டு நின் உடம்பு மறைந்து ஓராண்டாகிலும்
அன்றி பல்லாண்டாகிலும் நின் திருவுருவும் எம்
நினைவுகளும் எம்நெஞ்சங்களை விட்டு நீங்கா.

நின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

535, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (4351)

## தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

இறைச்சிக் கோழிகள் (BROILERS) தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அண்ணா பாம், இணுவில், செம்மா தெரு, (யும்மா மொஸ்க் லேன் யாழ்ப்பாணம். தொலைபேசி: 23412. 23413 4316

சிறுபண்ணையில் வேலை செய்வதற்கு நேர்மையான ஒரு வேலையாள் அல்லது ஒரு சிறு குடும்பம், உடன் தேவை. அ.திகளுக்கு முன்னுரிமையுண்டு. பாம் ஹவுஸ், கோட் ரோட், மல்லாகம். 4330

இரண்டாந்தர நிலையிலுள்ள தமிழ் தட்டெழுத்து இயந்திரம் உடன் தேவை. சி. சிவசக்தி B A (Cey ) 5, ஐயனார் கோவில் ரோட் வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 4340

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்து வேளாள குல உயர் கல்வித்தகைமையுடைய 30 வயது செவ்வாய் தோஷமுள்ள பெண்ணிற்கு என்ஜினியர், டாக்டர் ஆகப் பணிபுரியும் மணமகன்தேவை. வெளிநாட்டில் வேலை பார்ப்போர் விரும்பத்தக்கது பெண்ணும் பெற்றோரும் விரைவில் அவுஸ்திரேலியாவிற்கு குடும்ப ஒருங்கிணைப்பு அடிப்படையில் விண்ணப்பித்து செல்ல இருக்கிறார்கள். முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 4341 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 4341

யாழ். இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த 31 வயதுடைய (1ல்) உதயத்தில் செவ்வாய் தோஷமுள்ள தனியார் தொழில் நடத்துபவர் மாதம் ரூ 5,000 வருமானம் பெறும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. சாதக குறிப்புடன் உயரம், நிறம், மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 4326 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4326

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் சென்ற பஸ்ஸில் பிரயாணம் செய்த போது எனது அடையாள அட்டை, இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம், கணக்கு புத்தகம், 200 டொலர் செக் (நகுலேஸ்வரியின் பெயருக்கு வந்தது) ஒரு பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தபால் மூலமோ, நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ஞானசக்தி, சரவணை மேற்கு. சின்னமடுவடி. வேலணை போஸ்ட். 4350

## திருப்பி ஒப்படைக்க வேண்டுகோள்.

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல்மாதம் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட தமதுவானை திருப்பித் தருமாறு செல்சன்ஸ் தொழிற்சாலை நிர்வாகஸ்தர்களும், ஊழியர்களும் வேண்டுகோள்ஒன்றைவிடுத்துள்ளனர்.

இந்த வான் இல்லாமையால் தமது உற்பத்தியும் விற்பனையும் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அவ்வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி திணைக்கள

# மேற்பார்வையாளர் நேர்முகப் பரீட்சை

(புலோலி)

உள்ளூராட்சித் திணைக்கள வருமானமேற்பார்வை யாளர் (தரம் II) பதவிநியமன நேர்முகப்பரீட்சைக்கு கிளிநொச்சி. யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து 45 ஊழியர்கள் சமூகமளித்திருந்தனர்.

இப்பதவிக்கான விண்ணப்பங்களை உள்ளூராட்சித்திணைக்கள நியமனங்கள் அல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்களிடமிருந்து திணைக்களம் கோரியிருந்தது.

இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சிச் சேவைப்பணிப்பாளர் பணிப்பின் பேரில் கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு யாழ் பிராந்திய உள்ளூராட்சித்திணைக்களத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெற்றது கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள மாநகரசபை அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்கள் 45 பேரே இந் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளித்தனர்

# மூடப்பட்ட நிலையில் பண்டத்தரிப்பு மின்தறி ஆலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறியாலை கடந்த ஒரு மாத காலமாக மூடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது. மாதச் சம்பளத்திலும், நாட் சம்பளத்திலும் இந்த மின்தறியாலையில் இதுவரை காலமும் கடமையாற்றி வந்த ஊழியர்களை இம்மாதம் தொடக்கம் துண்டுக் கூலி அடிப்படையில் வேலை செய்யுமாறு சங்க நிர்வாகம் உத்தரவிட்டதை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சங்க நிர்வாகத்தின் புதிய உத்தரவை ஆட்சேபித்து தமக்கு முன்புபோல மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

## இவரைக் காணவில்லை

(வவுனியா)

முல்லைத்தீவுக்கு வியாபாரத்திற்கு சென்ற வவனியா ஆசிகுளத்தைச்சேர்ந்த நடராஜா செல்வநாயகம் என்ற இளைஞன் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் புகார் தெரிவித்துள்ளனர்

ஒரு வார காலத்திற்கு முன் முல்லைத்திவுக்கு வவனியாவிலிருந்து வியாபார நோக்குக்காக இவர் சென்று இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 17 பேர்காயம்

(கொழும்பு)

மத்துகம பகுதியிலுள்ள யகிகொலவத்த என்ற இடத்தில் இ. போ. ச பஸ் ஒன்றுபாதையிலிருந்து விலகி வயலுக்குள் விழுந்ததில் அதில் பிரயாணம் செய்த 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## அறிவித்தல்

மேற்படி ஸ்தாபனத்தில் நகை அடைவு பிடிக்கும் தொழில் நிறுத்தப்பட்டுள்ளது நகை அடைவு வைத்துள்ளவர்கள் தங்கள் நகைகளை 31-7-85க்குள் திருப்பி எடுத்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

உரிமையாளர்,

**தீபா ஜுவல்லர்ஸ்,**

309, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

(4353)

உ

ஸ்ரீ ராம ஜெயம்

## நன்றி நவிலல்

சென்ற 4-ம் திகதி நடைபெற்ற எங்கள் திருமண வைபவத்தின்போது நேரில் வந்தும் வாழ்த்துக்கள் தெரிவித்தும் அன்பளிப்புகள் வழங்கியும் மற்றும் பல வகையாலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தம்பதிகள், ஹேரம்ப பவனம், நல்லூர். — லக்ஷ்மி கோபாலன்.

(4336)

# BECON STUDY CENTRE

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

87 A/L

| | |
|---|---|
| தூய, பிரயோக கணிதம்:- | திரு. நல்லையா |
| பௌதிகம்:- | திரு சௌந்தி |
| இரசாயனம்:- | பிரபல ஆசிரியர்: |
| | திரு. செல்வா |
| தாவரவியல்:- | திரு. சிவவீரசிங்கம் |
| விலங்கியல்:- | திரு. ஞானேந்திரன் |

ஆரம்பம் 13-7-85 சனி 8-30

# பூட்டான் பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வ முடிவு ஏற்படும்

## இந்தியப் பிரதமர் நம்பிக்கை

(புதுடில்லி)

பூட்டானில் இலங்கை அரசுக்கும் தமிழ்த்தலைவர்களுக்கும் விடுதலை இயக்க பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுக்களில் ஆக்கபூர்வமான முடிவு ஒன்று ஏற்படும் என இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

பூட்டான் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதுதொடர்பாக இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளை இந்தியா வற்புறுத்திவந்ததாக வெளிவந்த செய்திகளையும் திரு. காந்தி மறுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை அந்நாட்டின் உள்நாட்டு விவகாரம். எனினும் சம்பந்தப்பட்ட சகலரும் ஓர் உடன்பாட்டுக்கு வந்து இன்றைய பயங்கரமான நிலைக்கு முற்றுப் புள்ளிவைக்கவேண்டும் என்பதே இந்திய அரசு அளிக்கும் அறிவுரையாகும் என்றும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

# யாழ் - வவனியா தொலைபேசி நல்ல முறையில் இயங்குகிறது

(வவனியா)

வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நேரடித் தொலைபேசி சேவை நல்ல முறையில் இயங்குகிறது.

அதேநேரத்தில் மன்னாருக்கான நேரடித் தொலைபேசி சேவையும் திருப்திகரமான முறையில் இயங்குவதாக தொலைத் தொடர்பு திணைக்கள அதிகாரி அதிகாரி ஒருவர் கூறினார்.

இங்கிருந்து கொழும்பிற்கான நேரடித் தொலைபேசி சேவையும் திருப்தியான முறையில் இயங்குகின்றது குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரி ஆசிரியர்கள் பற்றாக்குறை

(வவனியா)

பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறைவு இருப்பதாக கூறப்படுகிறது.

## வேள்வி உற்சவம்

[புலோலி]

வராத்துப்பளை அருள்மிகு காத்தவராயர் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் எதிர் வரும் 14-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

### தென்னாபிரிக்காவில்

# பொலிஸ் சுட்டதில் ஏழுபேர் பலி!

[லண்டன்]

தென்னாபிரிக்காவில் ஜோஹனஸ்பேர்கிற்கு அருகிலுள்ள கிராமத்தில், வன்முறை ஏற்பட்டதையடுத்து பொலிசார் சுட்டதில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஒரு பெண் உட்பட 6 தேசியவாதிகள் கொல்லப்பட்டதையடுத்து, தென்னாபிரிக்காவிலுள்ள ஆங்கிலிக்கயன் சேர்ச் நீதி விசாரணையொன்றை கோரியதைத் தொடர்ந்து சில மணிநேரத்தில் இச் சம்பவம் நடந்தது. (க)

# பாகிஸ்தானில் கண்ட இடங்களில் சுடுமாறு உத்தரவு!

[புதுடில்லி]

பாகிஸ்தானில் சிலசில பகுதிகளில் ஊரடங்கு சட்டத்தை அமுல் நடத்துவதற்கும் கண்ட இடத்தில் சுடுமாறும் பாகிஸ்தான் துருப்புக்களுக்கு கட்டளை விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மீண்டும் இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையில் இருவர் கொல்லப்பட்டனர்.

பொலிசாருக்கும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கும் இடையே இரு நாட்களுக்குமுன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலையில் அங்கு மிங்குமாக துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (க)

# அரசியல் சமூக மன்றத்தினால் மாணவர் கல்வி பாதிப்பு

## கல்லூரி அதிபர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய அரசியல் சமூக, பொருளாதார மாற்றங்கள் மாணவர்களின் கல்வித்தரத்தைப் பெரிதும் பாதிக்கின்றது மாணவ சமுதாயம் இன்று தவறான கொள்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது இக்கால கட்டத்தில் இது தவிர்க்க முடியாத ஒன்றாகும் எனினும் வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் அரும்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தம் ஆளுமையாலும் கடமையுணர்வினாலும் அயரா உழைப்பினாலும் மாணவர்களை நல்வழிப் படுத்த வேண்டும் இம்முயற்சிக்கு சமுதாயத்தின் பல்வேறு அமைப்புகளும் ஒத்தாசையாக விருந்து உதவி புரிய வேண்டும். இந்த வகையில் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஆற்றிவரும் பணிகள் பாராட்டிற்குரியன"

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. மு இராமலிங்கம் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் அங்கத்தினர் தமக்களித்த பாராட்டு வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: மாறிவரும் சமுதாயப் போக்கில் தொன்றுதொட்டு நாம் ஏற்றுக்கொண்டிருந்த வாழ்க்கை முறைகளும் மறக்கப்படுகின்றன, இது கண்டிக்கப் படவேண்டியது என்றார்.

இவ் வைபவத்தில் ஓய்வு பெற்ற அதிபர் திரு செ குணசிங்கம் ஆசிரியை திருமதி வி. சோமசுந்தரம் ஆகியோரும் பாராட்டப்பட்டனர்.

## வவனியாவில் கடத்தப்பட்ட இளைஞர்கள் விடுதலை

(வவனியா)

வவனியாவில் கடந்த திங்கட்கிழமை இனம் தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்ட இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை கடத்தியவர்கள் ஒரு இடத்தில் கொண்டு சென்று விசாரித்து விட்டு பின்னர் அவர்களை விடுவித்ததாகவும் கூறப்படுகிறது.

தெய்வக்குமார் (22 வயது) அஜீத் 21 (வயது) ஆகிய இருவருமே இவ்வாறு கடத்தப் பட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர்.

### கொழும்பு ஆஸ்பத்திரிகளில் தாதிமார்

# அடையாள வேலைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரி, பொரளை ஆஸ்பத்திரி, கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரி ஆகியவற்றில் வேலை செய்யும் தாதியார்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 1200 தாதிமார்கள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை தாதிமார்களின் இந்த அடையாள வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

சில கோரிக்கைகளை முன் வைத்து ஒருவார காலமாக தாதிமார்கள் சட்டப்படி வேலை செய்து வருகின்றார்கள்.

அவர்களது கோரிக்கைகளை அரசாங்கம் செவிமடுக்காத காரணத்தினால் இந்த அடையாள வேலை நிறுத்தத்தை தாதிமார்கள் மேற்கொண்டனர்.

## விஷஉணவினால் 247 மாணவர் பாதிப்பு

(சென்னை)

தூத்துக்குடியில் உள்ள பாடசாலை ஒன்றில் விஷஉணவு சாப்பிட்டதால் 247 மாணவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் இவர்களில் 150 மாணவர்கள் சிகிச்சைக்குப் பின் வீடுதிரும்பியுள்ளனர் மற்றும் மாணவர்கள் ஆபத்தான நிலையை தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## லெபனனில் கார்குண்டுக்கு 15 போபலி

(லண்டன்

லெபனனின் தென்பிராந்தியத்தில் நேற்று இரண்டு கார் குண்டுதாக்குதலில் 15 பேர் பலியானார்கள் இவர்களில் பெருபாலானவர்கள் இஸ்ரேல் ஆதரவான மக்கள் படை மற்றும் தெற்கு லெபனன் இராணுவத்தை சேர்ந்தவர்கள்

### அண்மையில் இடம்மாறிய

# ஆசிரியர்களின் பிரச்னை: சங்கம் விசேடமாக கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டம் இம்மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

வெளி மாவட்டங்களில் கடமை புரிந்து சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களின் பிரச்னைகளை ஆராய்வதற்காகவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

சுய விபரக் கோவை, ஊதிய வேறுபாடு ஆகியவற்றில் உள்ள பிரச்னைகளை இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து பெற்று அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளை கல்வி அமைச்சிடம் எடுத்து விளக்குவதற்கும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் நாட்டில் உள்ள பிராந்திய கல்விப் பணிமனைகளுக்குச் சென்று இப்பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பான அனுமதியை பெறவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் திட்டம் வகுத்துள்ளது என்றும் திரு மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## ஆபாச கஸட்டுக்கள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரிலுள்ள சில மினி தியேட்டர்களில் சில இளைஞர்களினால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட ஆபாச படங்களின் வீடியோ கஸட்டுக்கள் திருநெல்வேலியில் வைத்து இளைஞர்களினால் கொழுத்தப் பட்டது

திருநெல்வேலியில் வீடியோ கஸட்டுக்கள் வாடகைக்கு விடும் விற்பனை நிலையமொன்று இந்த கஸட்டுக்களை வாடகைக்கு விட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த நிலையத்துக்கு முன்னால்வைத்து இந்த ஆபாச திரைப்பட கஸட்டுக்கள் கொளுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வண்ணை பெருமாள் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயில் இராஜ கோபுர விமான கும்பாபிஷேகம் வரும் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் அன்று காலை 9-30 மணிக்கு மகாகும்பாபிஷேகமும் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும்.

மகா கும்பாபிஷேகத்தினையொட்டி கடந்தமாதம் 28-ம் திகதி ஆரம்பமான விசேச பூஜை ஆராதனைகள் தொடர்ந்து தினமும் நடைபெற்று வருகின்றன.

### நதிகள் பெருக்கெடுப்பு:

# உ. பிரதேசத்தில் 13பேர் பலி பீகாரில் 17பேர் மூழ்கினர்

[புதுடில்லி]

இந்தியாவின் கிழ்ப்பகுதியில் நதிகள் பெருக்கெடுத்து ஓடியதால் குறைந்தபட்சம் 30 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

உத்தரபிரதேச மாநிலத்தில் நதியொன்றில் படகு ஒன்று கவிழ்ந்ததினால் நேற்று 13 பேர் பலியானார்கள்.

பீகார் மாநிலத்தில் ட்ரக் ஒன்று வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டது 17 பேர் நீரில் மூழ்கினார்கள். (க)

### மணிவாக்கு

பணத்தைமட்டும் நம்பி தொழில்களைச் செய்தால், நாம் உண்மையிலே சோம்பேறிகளாவோம்; அல்லது அதிலும் தாழ்ந்த நிலையில் இருப்போம் என்பதை மறந்துவிடக்கூடாது. — தோரோ

## நமது நோக்கு

# பொறுமையுடன் புனராலோசனை செய்க

பெற்ரோல் தட்டுப்பாட்டால் பிரசவமேபாதிக்கப்பட்ட இக்காலத்தில் கார்ச் சாரதிகள் என்ன பேசிக்கொள்கிறார்கள்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் பெற்ரோல்விநியோகத்தை ஒழுங்குடனும் சாமர்த்தியத்துடனும் நடத்திவந்ததே!

66 வருடம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த இந்த ஸ்தாபனம் "சுயமாகக் குலைக்கப்படுவதாக" என்ற பிரேரணை பங்காளரின் அதிவிசேட கூட்டமொன்றில் வியங்கோள்வினையில் வருவது சாதாரண பொதுமக்களுக்கு நிச்சயம் வியப்பும்வேதனையுமளிக்கும்

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில்யாழ்ப்பாணம் வியாபாரச் சங்கத்துக்கு நேர்ந்த கஷ்டநஷ்டங்களை நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

மூடிவிடுவதற்குவேண்டிய ஆயத்தம் நடைபெறும் செய்தியை நாம் இலகுவில் நம்பவில்லை. இருப்பினும் போதிய காரணங்காட்டி, பங்காளருக்கும் பொதுமக்களுக்கும் இதுகாறும் காட்டி வந்த நேர்மையும் நாணயமும் எவ்வகையிலும்பங்கப் படாதவாறு தொடர்வதானால் சட்டத்துக்கமைய இதனைக் குலைப்பதை விட வேறுவழியில்லையென்று இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு சபைக்கு எவ்வித மகிழ்ச்சியையும அளிக்கமாட்டாதென்பது அறிக்கையில் அப்பட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபையின் 'ஆழ்ந்தகவலை' வேறெந்தவகையிலும் அகற்றப்பட மாட்டாதா?

கம்பனியின் சேவையால் பயனடைந்த பல்லாயிரம் மக்கள் சார்பில் நாம் இந்தக் கேள்வியை விடுக்கின்றோம்.

கம்பனியின் கம்பீரமான கட்டிடம் எரிந்த போதும், அதற்கு விசுவாசமான ஊழியரிகள் அக்கட்டிடத்துக்குள் மாண்டபோதும், கொள்ளையடிக்க முயன்ற காடையர் கூட்டத்தை நிர்வாகி ஒருவர் நிமிர்ந்த நெஞ்சுடன் எதிர்த்து உயிர் நீத்த போதும் நாம் கவலைப்பட்டோம், விசனத்தின் உச்சநிலையில் அரச படையினர் ஆரம்பித்த அழிவை திட்டவட்டமாகக் கண்டித்தோம்.

சங்கத்தை ஆட்டி அசைத்தாலும் வேரோடு களைவது வீண்முயற்சி என்ற நம்பிக்கை அன்றும் இருந்தது. இந்த இக்கட்டான கால கட்டத்திலும் இருக்கின்றது.

தீயைத் தொடர்ந்த கொள்ளைகள்-பாரிய கொள்ளைகள் திட்டமிட்டது போல பலமுறை நடந்தன. பொது மக்கள் நலனுக்கு உழைத்து செல்வாக்குப் பெருகிவரும் ஸ்தாபனத்துக்கு பகைவர்கள் இருப்பார்களென்பது இயற்கை. இதனை மூடிவிட விஷமிகளின் எத்தனம் இது என்றும் சந்தேகம் ஏற்பட்டது.

எனவே இன்று விற்பனை வீழ்ச்சியடைந்ததும், அது இன்று தொடர்வதும் பங்காளருக்கும் பொது மக்களுக்கும் ஒருபுதினமல்ல.

கொள்வனவு செய்ய பணப்பற்றுக்குறை, நாட்டில் நிலவும் குழப்பநிலை, போன்ற காரணங்கள் நாமனைவரும் அறிந்ததே. நிலைமை இன்னும் மோசமாகுமென்ற மருள் நோக்கத்துக்கு நாம் உடன்பாடாக இருக்க முடியாது.

மலையே வந்தாலும் தலையே தாங்க வேண்டுமென்ற அறவாக்கை கடைப்பிடித்த முன்னோடிகள் எமக்களித்த அருஞ்செல்வமே இன்று ரூபா 11,285,565 மதிப்புடைய இந்தக் கம்பனி.

நாணயத்தை பேண வேண்டுமென்ற பேரவாக் கொண்ட இயக்குநர்சபை கம்பனியை சுயமாகக் குலைக்கத் தவறினால், குறுகிய காலத்தில் வங்குரோட்டு நிலையை எதிர்நோக்கவேண்டுமென அஞ்சுகின்றனர்.

சகல துன்பங்களுக்கும் மூலகாரணம் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை; இன்று ஒரு நம்பிக்கைஒளி தூரத்திலாவது தென்படும் அறிகுறி உண்டு எமது தெருள் நோக்குக்கு இதுவே முக்கிய காரணம். எனவே கட்டி எழுப்பிய பாரிய ஸ்தாபனத்தைக் குலைக்கமுடிவு செய்யும்போது பூரண புனராலோசனை வேண்டும். பங்காளர்கள் இன்றைய இருளில் ஒளிகாண முடியுமானால் இதனைத்தவிர்க்க முன்வரவேண்டும். குலைக்க இலகுவில் மனம்வருமா?

யாழ்ப்பாணத்தவரின் சிகரத்துக்கு சிகரமான யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம் மூடப்படுமானால் தமிழர் வரலாற்றில் என்றும் காணப்படாத கறை எங்கள் வருங்கால சந்ததியினரைத் தொடருமென்பதில் ஐயமில்லை

'எனவே பொறுப்புடனும் பொறுமையுடனும் புனராலாசனைசெய்க' என்பது எமது வியங்கோள்வினை.

### கீதோபதேச சாரம்

தர்மம் தழைக்கவும்
தகாதன நீக்கவும்
கர்மமும் ஆர்திடக்
காண்டீபம் தூக்கு
வாய்
சர்மமாம் உடல்களே
சமரினில் அழிவன
மர்மமாம் ஜீவனை
மாய்த்திடயயார்
வல்லார்"
"கவிமாமணி,,

# திருவாசகமும் கிறிஸ்து சமய உண்மைகளும்

(முற்றொடர்)

'கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்று மணிவாசகர் தம்மைத் குறித்துக் கூறும்போது, அவர் தம்மை எத்துணை தாழ்த்தினர் என்பது தெற்றெனப் புலப்படும். இவ்வுண்மையை இலக்கணகாரர் மறுதலையுவமம் என்பர் அன்பை நிறைகோலில் நிறுக்க முடியுமெனின், கண்ணப்பனுக்குச் சக ஓரிருத்தல் அன்பு இருக்குங் கால தமக்குச் சய ஓரிருத்தல் அன்பு உண்டு என்கின்றனர் இவ்வடியார். 'கண்ணப்பனுக்கு எத்துணை அன்புண்டோ அத்துணை அன்பின்மை எனக்குண்டு' என்கின்றனர் இவர். கண்ணப்பன் ஒழுக்க நலமற்ற கல்வியறிவில்லாத கொலைபாதகனுகிய வேடனுவான். மணிவாசகரோ பல்வேறு கல்வித் துறைகளிலும் நிரம்ப மூழ்கி அறிவு நிறையப்பெற்று, ஒழுகக நலஞ்சிறந்த பாண்டிய அரசரின் மந்திரியாவார். உலகத்தில் அவர் அவ்வித உயர்ச்சி பெற்றிருந்தும், கண்ணப்பன் இழிவான வேடன் என்பதை நோக்காது தம்மை மிகவுந் தாழ்ந்த நிலையில் வைத்துக் கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின் என்றனர்.

இவ்வாறு அவர் கூறியதன் காரணம் மாற்றிப்பிறந்தவனுகிய கண்ணப்பன் அதேயனுபவம் பெற்றிருந்த தம்மினும் பார்க்க இறைவனன்பில் மூழ்கித்திளைத்திருந்தான் என்பதைத்தாம் நன்குணர்ந்ததேயாகும் என்று சொல்லாமலே விளங்கும். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம் அவர்களுடையது." (மத். 5:3), இது இயேசு பெருமான் கூறிய மலைப்பிரசங்கக்கூற்றுக்களிலொன்று. இதனைச் சைவர்கள் விளங்கும் உரையிற் கூறின், பூரண தாழ்மையுடையவனே வாழ்க்கையிற்றூய்மை அடைந்து வீடு பெறுவான், தாழ்மையென்னும் பாடத்தை ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிலிருந்தபோதுசீஷருக்குப் பலமுறை படிப்பிக்க வேண்டியிருந்தது கடைசி இரவிலுங்கூட அதனைப் படிப்பித்தனர். அன்று அவர் அதனைச் சொல்லளவிலும் செயலளவிலும் காட்டினார் அவர் சிலுவையில் அறையுண்டதற்கு முதலிரவு சீஷர்களுடன் ஒரு பந்தியிலிருந்து இராப்போசனஞ் செய்தார். யூதர் விருந்துகளில் உண்பதற்கு வேலையாள் ஒருவன் விருந்தாளிகளுடைய கால்களைக் கழுவுவதுண்டு. இயேசுவுக்கும் சீஷருக்கும் வேலையாள் இல்லாதமையின், சீஷருள் ஒருவனே கழுவவேண்டியிருந்தது. அவர்களுள் ஒருவரும் அதைச்செய்ய விரும்பாமையின், பந்தியிலிருந்தவராகிய கிறிஸ்துதாமே எழுந்துபோய்த் தண்ணீர் எடுத்து அவர்கள் ஒவ்வொருவருடைய காலையுங் கழுவினர். கழுவியபின் தாழ்மையைக்குறித்து அவர்களுக்குப் போதித்தனர். இதன் வரலாற்றை விவிலிய வேதத்தில் யோவான் எழுதிய சுவிசேஷம் 13-ம் அதிகாரத்திற் படித்தறிந்து கொள்க.

மணிவாசகரது தாழ்மையென்னுஞ் சிறந்த இயல்பிலிருந்து பிரிக்கமுடியாதஇன்னொரு குணம் மேற்கூறியது போல ஆழமான பாவஉணர்ச்சியாகும். இவ்வாறான பாவ உணர்ச்சியற்றவன் ஒரு போதும் வாழ்க்கையில் தூய்மையடைந்து ஈடேறமுடியாது. பசியுள்ளவனே உண்ண முடியும். "நீதியின்மேற் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்? அவர்கள் திருப்தியடைவார்கள்" (மத். 5, 6) என்பது ஆண்டவர் இயேசுவின் வாக்காகும் மேற்கூறிய சைவ அடியார் தம் பாவத்தையுணர்ந்து நீதியின் மேற்பசி தாகமாயிருந்தார். தம்மைப் பெரிதும் கவர்ந்து கொண்டதும் விடமுடியாததுமாகிய பெண்ணாசை முதலிய பாவத்தினின்றும் அறவே நீங்கித் தூய்மை அடைந்து வீடடையவேண்டுமென்று பெரிதும் விழைந்தனர். அதனையறிந்த இறைவன் திருப்பெருந்துறையிற் காட்சியளித்து அவரை முழுவதும் மாற்றி உலக ஆசைகளை மறக்கப்பண்ணினர். பாவ உணர்ச்சிகளுடைய இருதயந் தூய்மைப்படுவதற்கு இறைவன் அருள்புரிகின்றனர். இருதயந் தூய்மைப்படுபவன் இறைவனைக் கண்டடைகின்றன்:

"இருதயத்திற் சுத்தமுள்ளவர்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." (மத். 5 .8)

"கொவ்ளேர் பினவகலேத் தடங் கொள்கையர் கொவ்வை செவ்வ ய் விள்ளெனெனினும் விடுதிகண்டாய்" காருறு கண்ணிய ரைம்புலனாற்றங் கரை மரமாய, வேருறுவேனை விடுதி 'புலைய னேனையும் பொருளென நினைத்து' 'நாயிற் கடைப்பட்ட நம்மையும்' 'மத்துறு தண்டயிரிற் புலன் நீக்கதுவ' இவ்வாறு தம் பாவங்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாக உணர்ந்து கண்ணீர் விட்டழுதனர் மணிவாசகனர் அழுதது மட்டுமன்று உலகிலுள்ள யாவரும் எக்காலத்திலும் அறியுமாறு திருவாசகம் என்னுந் தமது நூலின் அவைகள் ஒவ்வொன்றையும் தெளிவாகக்கூறி வைத்துள்ளனர். இச்சைவ அடியாரைப்போலவே விவிலிய வேதத்திற் கூறப்படும் கிறிஸ்தவ அடியார் யாவரும் ஆழ்ந்த பாவ உணர்ச்சியுடையவராயிருந்தனர்.

எடுத்துக்காட்டாக ஓரடியானுடைய வாழ்க்கை வரலாற்றை ஆராயின், இவ்வுண்மை விளங்கும். தாவீது என்னும் அரசன் எல்லா யூதராலும் நன்கு மதிக்கப்பட்டவனுவான். ஆனால் பெண்ணாசையிலிருந்து முற்றும் நீங்காதவனுயிருந்தான். அவனுக்குப்பல மனைவிகளிருந்தபோதிலும், அவனுடைய யுத்தவீரரில் ஒருவனுடைய ஒரேஒரு மனைவியில் மோகங்கொண்டு யுத்தத்தில் அவனைச் சேனையின் முன்னணியில் விடுத்துக்கொல்வித்தான். அதையறிந்த கர்த்தர் தம் தீர்க்கதரிசிகளிலொருவனை அனுப்பி அக்குற்றத்தின் பாரதூரத்தை அவனுக்கு அறிவித்தனர். அவன் கண்ணீர் விட்டழுது, 51-ம் சங்கீதத்தில் தன் பாவ உணர்ச்சியை அறிவிக்கின்றன். 'என் பாவம் எப்பொழுதும் என்முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்து உமது கண்களுக்குமுன் பாவப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். தேவனே சுத்த இருதயத்தைஎன்னிலே சிருஷ்டியும். உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்தாவியை என்னிடத்திலிருந்துஎடுத்துக்கொள்ளாமலும் இரும். (சங் 51 ;3, 4, 10, 11)

வேதத்தில் ... 2-ம் சாமுவே... என்னும் புத்தகத்தில் 11... 12ம் அதிகாரத்தில் தாவீ... செய்த மேற்குறித்த பொ... லாங்கான பாவத்தின் வ... லாற்றைப் படித்தறியலா...

இவ்வுண்மையை உறுதி... படுத்துவதற்கு இன்ரேர் எடு... த்துக்காட்டைக் கூறலாம் பு... யேற்பாட்டில் பல நூல்க... எழுதிய பவுல் அப்போஸ்த... னும்! மாணிக்கவாசகரையு... தாவீதையும் போன்ற ஆழ்ந்த பாவ உணர்ச்சியுடையவனு... இருந்தான். அவனும் மே... கூறிய சைவ அடியாரை... போன்று கல்வியறிவு நிறை... வனுய் நல்லொழுக்கம் உ... யவனுய் விளங்கினன், த... ருவுக்குப் போகும் வழிய... ஆண்டவராகிய இயேசு கா... யளித்தபோது மறுபடி... பிறக்கும் அனுபவத்தை... பெற்று அதன்பின் தன் ... றங்களை உணர்ந்து குறிப்பி... போது "பாவிகளை இரட்சி... கிறிஸ்து யேசு உலகத்தில் ... தார், அவர்களிற் பிரதா... பாவி நான்" என்கிறு... (தீமோ 1.15)

(அமரர் K. E. மதியாபரணம் அவர்களால் எழுதப்பட்டது)

நாயன்மார்கட்டு

## ராஜராஜேஸ்வரி அம்பாள்

# வருடாந்த உற்சவம்

யாழ். நாயன் மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்கியம்பாள்) ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 11 - 7 - 85 வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

—நாயன்மார்கட்டு

**ப. மகேந்திரன்**

இவ்வாண்டு இவ்வாலயத்தில் நவக்கிரக பிரதிட்டை செய்யப்பெற்று கடந்த 8-6-85 அன்று மகாகும்பாபிஷேகமும் இடம்பெற்றதுடன் தொடர்ந்து 14 தினங்கள் அபிஷேகங்களும் இடம்பெற்றன. தற்போது புதியதொரு வாகன சாலையும் ஆலய வடக்குவீதியில் அமைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்வரும் 20 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று அம்பாள் திருத்தேரில் ஆரோகணித்து அருள்பாலிக்கும் உற்சவம் நடைபெறும். மறுநாள் ஆடிப்பூரத்திலன்று (21-07-85 திங்கட்கிழமை) இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் இவ்வாண்டு உற்சவங்கள் நிறைவுபெறும்,

## இலங்கை அக...

# 48,000

# 30, 000

## பாராளுமன்...

(கொழும்பு)

இலங்கையில் அகதிகள் முகாம்களில் 48,227 பேர் இருப்பதாக நேற்றுமுன்தினம்...

## இவரைப் பற்றிய தகவல் இல்லை

(வவனியா)

வவனியா ஆஸ்பத்திரியில் வைத்து கடந்த வியாழ... இரவு கடத்தப்பட்ட பாவ... குளத்தினைச் சேர்ந்த தெ... வேந்திரன் என்ற இளைஞனை... பற்றிய எதுவித தகவலு... கிடைக்கவில்லை.

குறித்த இளைஞனுக்கு என்ன நடைபெற்றது என்பது ... தெரியவில்லை.

அதி உ...

சோ...

ZNP இது பல்நோக்கு...

பயிர் பே...
பொஸ்...

ஆகியவற்று...

பேரஞ்சி, ப...
திராட்சை, மிளகாய், ...

A PRODUCT OF
LEFFINGWELL
A BUSINESS OF
UNIROYAL CHEMICAL

## ங்கை அகதி முகாம்களில்
# 48,000பேர் உள்ளனர்
# 30, 000பேர் தமிழர்கள்
## பாராளுமன்றத்தில் 'லலித்' தகவல்

(கொழும்பு)
கையில் அகதிகள் ளில் 48,227 பேர் தாக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அத்தனகல எம் பி. யின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்.

17,112 சிங்களவர்களும், 30,359 மிழர்களும் 760 முஸ்லிம்களும் முகாமகளில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தில் 24 000 பேர் அகதிகள் முகாமில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ரைப் பற்றிய வல் இல்லை

(வவனியா)
ரியா ஆஸ்பத்திரியில் கடந்த வியாழன் டந்தப்பட்ட பாவற் ளைச் சேர்ந்த தெய் ன் என்ற இளைஞனைப் எதுவித தகவலும் வில்லை.
த இளைஞனுக்கு என்ன பெற்றது என்பதும் ல்லை.

தில் 2-ம் சாமுவேல் புத்தகத்தில் 11ம், காரத்தில் தாவீது மேற்குறித்த பொல் ன பாவத்தின் வர ப் படித்தறியலாம். ண்மையை உறுதிப் வதற்கு இன்ஞெர் எடுத் டைக் கூறலாம் புதி ட்டில் பல நூல்களை பவுல் அப்போஸ்தல மாணிக்கவாசகரையும், தயும் போன்ற ஆழ்ந்த உணர்ச்சியுடையவனுய் ன். அவனும் மேற் சைவ அடியாரைப் கல்வியறிவு நிறைந்த நல்லொழுக்கம் உடை விளங்கினுன், தமஸ் போகும் வழியில் வராகிய இயேசு காட்சி போது மறுபடியும் ம் அனுபவத்தைப் அதன்பின் தன் குற் உணர்ந்து குறிப்பிடும் "பாவிகளை இரட்சிக்க யேசு உலகத்தில் வந் அவர்களிற் பிரதான நான்" என்கிறு. 1.15)

## "மாணவருக்கு விஞ்ஞானத்துடன் சமயக் கல்வியும் அவசியம்"

[கோப்பாய்)
"திருவாசகம் என்றும் புதுமையானதும் இனிமையானதுமாகும். தேனுனது இனிமைக்கும் பழுதுருத் தன்மைக்கும் முதன்மையானதாக வளங்குவது போலத் திருவாசகமும் விளங்குவதனுல்தான் அது "திருவாசகம் என்னும் தேன்" எனப்பட்டது.

மணிவாசகரது அருள் மிகுந்த பாக்களும் அவரது வாழ்க்கை நெறியும் மனித குலத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்குவன. இதனை இன்றைய மாணவர் சமூதாயம் பின்பற்றுவதன் மூலம் நற்பயனைப் பெறலாம்."

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா கட்டவேலி யாக்கரை வித்தியாலயத்தில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-
"பழமைக்கும், பெருமைக்கும் அருட்பாக்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவற்றுள் மாணிக்கவாசக சுவாமிகளது பாடல்கள் மனித குலத்தையே மாற்றியவைத்து உலகியல் கலந்த இறையியலை மக்களுக்கு எடுத்து விளக்குகின்றது,

மாணவர்கள் தமது இறமைக் காலத்திலேயே விஞ்ஞானக் கல்வியை வளர்த்துக் கொள்ளும் அதே நேரத்தில் சமய நம்பிக்கையுடன் இறை பக்தியில் ஈடுபட்டு ஆன்மீக ஈடேற்றத்திற்கான பணிகளில் ஈடபடவேண்டும். இன்று தமிழினம் தலைநிமிர்ந்து இக்கட்டான சூழ்நிலையிலும் வாழ்ந்து கொண்டிருப்பதற்குச் சமய நம்பிக்கையே முக்கிய காரணியாகும்.

நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை நெறியும், அவர்கள் வகுத்து வைத்த வழிபாட்டுக் கொள்கைகளும் இன்று நம்மை வழிநடத்திச் செல்கின்றன. இதனை இன்றைய சமுதாயம் மறந்துவிடாமல் தொடர்ந்து பின்பற்றிவருதல் வேண்டும்."

வித்தியாலய அதிபர் திரு. க. முருகேசு தலைமையில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசையின்போது பாடசாலை மாணவர்களும் மணிவாசகரை பற்றி உரையாற்றினுர்கள்.

## வள்ளுவர் இல்லம் முதலிடம்

(பூநகரி)
கரியாலை நாகபடுவான் இல 1- முழங்காவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் திரு பொன். தில்லைநாதன் தலைமையில் கடந்த கடந்த 6ம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனுப். எம். எம். மன்சூரும் விசேட விருந்தினராக பரந்தன் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. நா. தனிகாசலம்பிள்ளையும் கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் வவளுவர் இல்லம் முதலாம் இடத்தையும், இரண்டாம் இடத்தைப் பாரதி இல்லமும், நாவலர் இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)
உரும்பராய் புனித மிக்கேல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வ. சுவாம்பிள்ளை, உப தலைவர்கள்; திரு. த. பேரின்பநாயகம், திரு. க. அருளப்பு, செயலாளர்: திரு. ம. பேரின்பநாதன், உபசெயலாளர்: திரு. தா. அந்தோனிப்பிள்ளை, பொருளாளர்: ஞானவெளிச்சம்.

பதினெரு பேர் கொண்ட இணக்கசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## எரிபொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)
நீண்டகாலத்திற்கு பின்பு பண்டத்தரிப்பு தனியார் எரிபொருள் வழங்கும் நிலையத்தில் கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணை, பெற்ரோல், டீசல் ஆகியன விநியோகிக்கப்பட்டன.

## நிறை குறைந்த பாணை விற்ற இரு பேக்கரிகள் மீது
# சட்ட நடவடிக்கை

( சுண்டுக்குளி)
யாழ். உள்நாட்டு வியாபார பகுதியினரால் அண்மையில் கல்வியங்காடு. நல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள பேக்கரிகள் மீது திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது கல்வியங்காட்டிலுள்ள இரு பேக்கரிகள் இவர்களிடம் சிக்கிக் கொண்டன. ஒரு பேக்கரியில் 310 கிராம்எடையுள்ள பாணை 2 ரூ 50 சதத்திற்கும் இன்னொரு பேக்கரியில் 350 கிராம் எடையுள்ள பாணை 3 ரூபாவிற்கும் விற்பனை செய்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப் பேக்கரிச் சொந்தக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் இப்பகுதியிலுள்ள விற்பனை ஸ்தாபனங்கள் மீதும் இவர்களால் பரிசோதனை மேற்கொண்ட போது விலைப்பட்டியல்கள் இல்லாதது கண்டு பிடிக்கப்பட்டதுடன் மெட்றிக் அளவுகளில் பொட்களை விற்பனை செய்யும் படியும் பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனேகமான தாரசுகள் சீலிடப்படாமல் உபயோகிக்கப்பட்டதும் இவர்களது கவனத்திற்கு எடுக்கப்பட்டதும் மேலும் இப்பகுதியில் 400கிராமுக்கு குறைவான பாணை எந்த ஒரு பேக்கரியில் இருந்தும் வாங்கக் கூடாதென்றும் மீறி வாங்கி விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

## 'விளையாட்டுப் போட்டிகள் உடல் வளர்ச்சிக்கும் உதவுகின்றன'

(கல்வியங்காடு)
"விளையாட்டுப் போட்டிகள் உடல்வளர்ச்சிக்கு மட்டும் பயன் படுவது மாத்திரமின்றி அவை ஒழுக்கத்துக்கும், கட்டுப்பாட்டுக்கும் உதவுவதால், உள வளர்ச்சிக்கும் உதவுகின்றன".

இவ்வாறு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் "விளையாட்டுப்போட்டியின் ஒவ்வோர் நிகழ்ச்சியும் குறிக்கப்பட்ட சில நிபந்தனைகளுக் கமையவே நடைபெறுகின்றன. போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் தத்தமது திறமைகளை வெளிப்படுத்தும் அதேசமயம் போட்டிநிபந்தனைகளை மனதில் கொண்டு மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளுகிருர்கள் இக்கட்டுப்பாடு பிற்காலத்தில் அவர்களின் வாழ்க்கை முன்னேற உதவுகிறது" என்ருர்.

வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ். சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதி. சொ. இராமலிங்கம் பரிசில்களை வழங்கினுர்.

## வவனியாவில் விளையாட்டுப் போட்டி

(வவனியா)
வவனியா தமிழ் கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 16ஆம், 17 ஆம் திகதிகளில் வவனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவனியா கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


தி உச்ச விளைச்சலுக்கு
சார்பா-ஸ்பிரே®
பாவியுங்கள்

இது பல்நோக்கு திரவம். இலையினூடாக செயலாற்றும் வளமாக்கி




பயிர் போஷாக்கு:- நாகம் 2% (Zn) நைதரசன் 10% (N) பொஸ்பரசு 12% P 2 O 5. கந்தகம் 1% (S) அடங்கியது.

நியுட்ருபோஸ் N, நியுட்ருபோஸ் K, ஆகியவற்றுடன் கலந்துதெளிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பயிர்கள்:- நெல் மற்றும் சிறுதானியப் பயிர்கள், பேரூஞ்சி, பட்டாணி, கோவா, பூ கோவா, கரட், உருளைக்கிழங்கு, சை, மிளகாய், வெங்காயம், பூச்செடிகள் ஆகியவற்றிற்கு உகந்தது.

மி.லி. 500
ரூ.60.00

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்ரட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

PRODUCT OF
NGWELL
USINESS OF
L CHEMICAL UNIROYAL

TEAM-1204

R யுனிரோயல் டிரேட் மார்க்:

ஸ்ரான்லி மினி 'A'
10-30, 2-30
கமல் - ஊர்வசி
அந்தஒரு நிமிடம்

நியூ சாந்தி மினி
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-45
Dirty Harry
[Action Packed]

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 4-30, 6-30
Pair Girls
3 பெண்கள் ஒருநாட்டிற்கு வேலை தேடி போகும் பயங்கர காட்சி வயது வந்தவர்களுக்கு மட்டும்]

லிபேர்ட்டி மினி
தினசரி 10-30, 2-30,
எம். ஜி. ஆரின்
நாடோடி மன்னன்
பி. ப. 6 மணிக்கு
Bruce Lee
ENTER THE DRAGON
Karate Film

உஷா மினி
(கே கே எஸ். வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும் வை சி சி. கு. கடை சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-00
Debra Blee in
The Beach Girls
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

மேபெயர் மினி
(கன்னாதிட்டி)
10-30 a m.
பாக்கியராஜ். ஊர்வசி,
முந்தானை முடிச்சு
2-30 p m
DEATH RIDES A HORSE
Lee van cleef
(Cowboy Film)
6 00 p m
சிவாஜி-ஜெமினி-சாவித்திரி
பாசமலர்

மொடேர்ண் மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
10-7-85 காலை 10 மணி
நவக்கிரகநாயகி
பாண்டியன், நளினி, சுரேஷ். விஜி
EK. DUUJE KE LIYE
கமலஹாசனின் சிறந்த நடிப்பில் உருவான ஹிந்திப் படம்
2-30, 4-30 காட்சிகள்

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
Night Shift

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
கணவனை இழந்த இளந்தாய்?
இரு ஆண் குழந்தைகள்
அவளின் இளமை அழகு?
ஒரு காமுகனிடம் சிக்கி உயிர் துடிக்கிறாள்?
பழிவாங்கத் துடிக்கும் இரு உள்ளங்கள்?
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

# படைப்பிலக்கியங்களால் மக்கள் பயன்பெறவேண்டும்

## நூல்வெளியீட்டு விழாவில் உரை

(கிளிநொச்சி)

இளைய தலைமுறையின் முன்னணி எழுத்தாளரும் மறுமலர்ச்சி எழுத்தாளருமான கோப்பாய் சிவத்தின் இரு நூல்களை ஒரே நேரத்தில் வெளியிட்டதன் மூலம் கிளிநொச்சி வாழ் மக்களும் இந்த மண்ணும் பெருமையடைகிறது. இந்தப் பெரும் பணியை ஈடேற்றி வைத்த கிளிநொச்சிப் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கம் பாராட்டுக்குரியது

இவ்வாறு கோப்பாய் சிவத்தின் நியாயமான போராட்டங்களை சிறுகதைத் தொகுப்பினதும் இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஆய்வு நூலினதும் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்டத் தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் கூறினார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயக் கலை அரங்கில் கிளிநொச்சிப் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் கே வி கே. திருலோகமூர்த்தி தலைமையில் பிரஸ்தாப வெளியீட்டு விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திப் பிரிவு உதவி அரசாங்க அதிபரும் எழுத்தாளருமான செங்கை ஆழியான் கே. குணராசா பேசுகையில் கூறியதாவது:

ஈழத்து இலக்கிய உலகில் கோப்பாய் சிவத்தின் ஆக்கங்கள் படைப்பிலக்கியங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இவரது விடாமுயற்சியும் எழுத்தாற்றலும் இவரை உன்னத இடத்திற்கு இட்டுச் சென்றுள்ளதுடன் பல பரிசில்களையும் பெறவழிகோலி உள்ளது.

நியாயமான போராட்டங்கள் சிறுகதைத் தொகுப்பு நூலுருப் பெற்றது. ஈழத்து இலக்கிய உலகிற்கு வரப்பிரசாதமாகும். இந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றி வைத்த கிளிநொச்சிப் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கத்தினரை ஈழத்து இலக்கிய உலகு என்றும் மறக்காது.

படைப்பு இலக்கியங்கள் மக்களுக்கு பயன்பெறத் தக்க வகையில் அமைய வேண்டும் என்பதற்கு யதார்த்த ரீதியான சிந்தனைகளை முன் வைத்தும் கோப்பாய் சிவத்தின் எழுத்துலகப்பணி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

டாக்டர் திருலோகமூர்த்தி தமது தலைமை உரையில்குறிப்பிட்டதாவது:

கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றத்தில் இம்மாவட்டம் பத்திரிகையாளர்களதும், பத்திரிகையாளர் வாசகர் நலன் புரிச்சங்கத்தினதும் பங்களிப்பு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழ் மக்கள் இன்று சொல்லொணாத்துயரங்களை அனுபவித்துவரும் இவ்வேளை எழுத்தாளர்கள் இயன்றவரை இனத்தின்விடிவிற்காகப் பாடுபட முன்வரவேண்டும்.

ஈழநாடு வாரமலர் ஆசிரியரும் யாழ் இலக்கியவட்டத் தலைவருமான சபிபாரதி சு. சபாரத்தினம் பேசுகையில். கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இலக்கியவட்டங்களுக்கு வருகை தருவோரின் தொகைமிகக்குறைவாகவே இருக்கும். இந்நாட்களில் இன்று நடைபெறுகின்ற இந்த வெளியீட்டுவிழாவில் பெருந்திரளானோர் கலந்துகொள்வது பிரமிப்பைத்தருகிறது. அதுமட்டுமல்லாமல் சிறந்த ஓர் எழுத்தாளரான கோப்பாய் சிவத்தின் இருவெளியீடுகளையும் வெளியீட்டு சாதனையை நிலைநாட்டிய கிளிநொச்சி பத்திரிகையாளர்களையும் அவர்கள் சார்ந்த சங்கத்தையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஈழநாடு வாசகர்வட்டத் தலைவர் நா. சோதிநாதன் பேசுகையில் ஈழத்து இலக்கிய உலகிற்கு கோப்பாய் சிவம் கிடைத்தது ஒரு பெருமைக்குரிய விடயமாகும் இவரது தமிழ்ப்பத்திரிகைகள் சஞ்சிகைகள் நூல் ஒரு பொக்கிசமாகும் என்றார்

பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச்சங்கச் செயலாளரும் தொழில் நுட்பப் உத்தியோகத்தருமான சிவ. திருக்கேதீஸ்பரன் நன்றியுரை கூறினார்.

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-30
ரஜனி-கமல்-ஸ்ரீபிரியா
'ஆடு புலி ஆட்டம்'

குமரன் மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30
M. G. R., பானுமதி, சக்கரபாணி நடித்த
மலைக்கள்ளன்

பவித்ரா மினி
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
Abduction
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, இரவு 6-00
GANDHI
காந்தி அடிகள்
குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
"SPLASH"
(color)
கடல்கன்னி பெண்ணாக மாறும் அதிசயம்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

சோபிகா மினி
(ஹோட்டல் சோபிகா மேல்மாடி பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30, 6-00
கமல், ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த
ஆடு புலி ஆட்டம்
பயங்கர சண்டைக்காட்சிகள் நிறைந்த படம்

## அனலை ஐயனார் உற்சவம்

(அனலைதீவு)

அனலைதீவு ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 17ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் நிகழும்.

30ஆம் திகதி செவ்வாய் தேர்த் திருவிழாவும் 31ஆம் திகதிபுதன் தீர்த்தமும் அடுத்த நாள் வியாழன் பூங்காவனமும் நிகழும்.

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—27 [1985-7-11]
வியாழன்
திதி—நவமி முன் இரவுவரை
நக்ஷத்திரம்—அச்சுவினி முன் இரவு வரை

மேடம்:- மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்:- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்:- தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும் கடந்த கால நிகழ்ச்சிகள் அலை மோதும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டாம்.

கடகம்:- மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைபடுமளவிற்கு முன்னேற்றம் உண்டு. அன்னைவழி ஆதரவு தாராளமாக கிடைக்கும்.

சிங்கம்:- புத்திரவழியால் புகழுண்டு. புதிய பாதையில் தடை ஏற்படும். குடும்பத்தில் பிணைப்புகள் பலப்படும். சுப தினம்.

கன்னி:- கௌரவத்தைப் பாதிக்க கூடிய சம்பவங்கள் இடம் பெறும். தூற்றல் களை கொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன் யோசனை நன்று.

துலாம்:- குடும்பவாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவரிடம் இருந்து உதவியுப் கிடைக்கும். சிறப்பான தினம்.

விருச்சிகம்;- குறை கேட்க நேரிடும் கடமையில் தடைகள் தோன்றும் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு.

தனுசு:- நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். குருவின் ஆசியுமுண்டு.

மகரம்:- கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர் ஆதரவு உண்டு.

கும்பம்:- அதிஸ்ட தேவதையின் அருள் உங்களுக்குகிடைக்கலாம். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல் உண்டு

மீனம்:- திருடர் பயத்திற்கு இடமுண்டு. தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும் அவசியம் பொறுமையைப் பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

றெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED
★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்)
(GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள்
(FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்
Rs. 6/75-க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி, ஹொலண்ட்
முதலிய நாடுகளுக்கு
குறைவான கட்டணத்துடன் பாதுகாப்பான பிரயாண ஒழுங்குகள்.
கொழும்பிலிருந்து எமது பிரதிநிதி பிரயாணம் பூர்த்தியாகும்வரை உங்களுடன் வந்து எல்லா உதவிகளையும் செய்வார்.
பாஸ்போட், பொண்டிங், இந்தியன் விஸா முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.
N. தவம்,
PARIS TRAVELS
100,1/3, Keyzer Street,
Colombo-11
'சுமங்கலி',
நவீன சந்தை,
சாவகச்சேரி,
முகாமையாளர்,
குமரன் டூரிஸ்ட் இன்,
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23753.
எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்,
யோகநாயகி சினிமா,
வல்வெட்டித்துறை.

# தாயகம் திரும்புவோர் நிலைபற்றி செல்லச்சாமி லலித் உடன் தொடர்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்குவரத்து சேவை எப்போது நடைபெறும் என்பதனை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எம். எஸ் செல்லச்சாமி கேட்டுள்ளார். இவர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலிக்கு விடுத்த வேண்டுகோளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

தற்போது இலங்கையில் இருந்து தாயகம் திரும்புவதற்குசுமார்50,000பேர் இருக்கிறார்கள் என்றும் கப்பல் போக்குவரத்து சேவை இல்லாத காரணத்தினால் இவர்கள் இந்தியா செல்ல முடியவில்லையென்றும் இந்தியா செல்லும்வரை இலங்கையில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்றும் திரு. செல்லச்சாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

## இந்திய போயிங்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டது. விமானம் விபத்துக்குள்ளாகிய கடைசி நேரம் வரை பதிவுசெய்யப்பட்ட "பைலட்டின் குரல்" மூலம் பல தகவல்களை பெற முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது "கறுப்பு பெட்டி"யை மீட்கும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. [ரா]

## தமிழ்ப் பிரதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### பூட்டான் செய்தி

இது இவ்வாறிருக்க 'திம்பு'வில் இலங்கை அரசியல் பிரமுகர்களுக்கிடையே இடம்பெறும் பேச்சுக் குறித்து பூட்டானின் உத்யோகபூர்வ பத்திரிகையொன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் இலங்கை அரசதரப்பினருக்கும், தமிழ்க் குழுக்களுக்குமிடையிலான சந்திப்பு மென்மையானதாகவும், சிநேகபூர்வமானதாகவும் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பும் மிகுந்த புரிந்துணர்வுடன் நடந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டான் அரசின் விருந்தோம்பலையும் இலங்கை பிரமுகர்கள் பாராட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இலங்கை அரசு தரப்பில் திரு. எச். டபிள்யு. ஜயவர்த்தனவும் தமிழீழ குழுக்கள் சார்பில் லோகநாதன் கேதீஸ்வரன் என்பவரும் பூட்டான் அரசின் ஏற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [கி]

## நல்லமுறையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு லலித் அத்துலத் முதலி நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் நம்பிக்கை தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமான அறிக்கைகளை மேற்கோள் காட்டி இவ்வாறு கூறிய திரு. லலித் தொடர்ந்து பூட்டான் பேச்சுவார்த்தை குறித்து முழுமையான விபரங்கள் இன்னும் அறிவிக்கப்படாதபோதும்; இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு ஒன்றினை எடுப்பதில் இருதரப்பினருக்குமிடையிலான கூடிய விரைவில் வேறுபாடுகளை குறைத்துக்கொள்ள இந்தப் பேச்சுவார்த்தை வழிவகுத்துள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லலித்தின் இந்த அறிவிப்பை ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று அமைச்சரவை கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திம்பு மகாநாட்டில் இறுதித் தீர்வை எதிர்பார்க்கமுடியாது. பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறும் இம்மகாநாட்டில் இரு சாராரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் நெருக்கமான நிலை தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்" என்றார்.

## சுகயீனம்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் இதுபற்றிமேலும் தெரிவித்ததாவது: திரு ஜே ஆர் ஜயவர்த்தனசுகயீனமுற்றுள்ள போதிலும் பூட்டான்பேச்சுக்களில் எதுவித தடையும் ஏற்படமாட்டாது.

அப்பேச்சுக்கள் குறித்த அனைத்து ஆலோசனைகள், அறிவுரைகள் அனைத்தையும் ஜனாதிபதி இலங்கைக்குழுவிடம் ஏற்கனவே வழங்கிவிட்டார். எனவே ஜனாதிபதியை அக்குழு தற்போது தொடர்பு கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்றார். (கி)

## பிரியாவிடையும் மதிய போசனமும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கிளையில் 38 வருடகாலமாகக்காசாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெறும் திரு. க. மயில்வாகனத்திற்கும் கடந்த காலத்தில் வேறு கிளைகளுக்கு மாற்றலாகிச் சென்ற உதவி முகாமையாளர் திரு. அ. கோபாலகிருஷ்ணன் உட்பட மற்றும் சில ஊழியர்களுக்குமான பிரியாவிடை வைபவமும், மதிய விருந்துபசாரமும் கிளை ஊழியர் நலன்புரிச்சங்கத்தாரால் அண்மையில் அளிக்கப்பட்டது.

பிரியாவிடைக்குத் தலைமை தாங்கிய முகாமையாளர் திரு பி. விக்னேஸ்வரன், திரு மயில்வாகனத்திற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து உரையாற்றும்போது அன்னாரின் சேவைக்கும் உதவி முகாமையாளர், ஊழியர்களின் நிர்வாகத் திறமைக்கும், கூட்டுறவுக்கும் பாராட்டுத் தெரிவித்தார். பிரியாவிடை பெறுபவர்களின் சார்பில் உதவி முகாமையாளர் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு நன்றி தெரிவித்தார். ஊழியர்கள் சார்பில் திரு. சு. செல்வராசாவும், சங்கத்தின் சார்பில் செயலாளர் ரி. ஜே. ஜோனும் நன்றி தெரிவித்தார்கள்.

# குச்சவெளி, சேருவில மக்கள் வெளியேற்றம்!

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி சேருவிலப் பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவில் வெளியேறியுள்ளனர்.

அண்மைக்காலங்களில் இப்பகுதிகளில் இடம்பெற்ற கலவரங்களையடுத்தே மக்கள் இங்கிருந்தும் அகதிகளாக வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

சிங்கள-தமிழ் ஆகிய இரு இனங்களைச் சேர்ந்த மக்களும் இங்கிருந்து சென்றுள்ளனர். இரு சாராரினதும் வீடுகள், உடைமைகள் சேதமாக்கப்பட்டும், தீயிடப்பட்டும் காணப்படுகின்றன.

அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனமான 'ரேபியா' தலைவர் ரியர் அட்மிரல் அல்பிரட் பெரேரா இக்கிராமங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

ஆயுதப்படைகள் வெளியேறுவதுடன், ஊர்க்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்களையும் மீளப்பெற வேண்டுமென இப்பகுதிகளைச் சேர்ந்த தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டுநிலைமை சீரடையும் பட்சத்தில் மீண்டும் தமது கிராமங்களில் சென்று குடியேறப்போவதாக சிங்கள அகதிகள் தெரிவித்தனர். (கி)

# யாழ். நகரில் மீண்டும் இரவு நேர சனநடமாட்டம்!

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் 8 மணி தொடக்கம் 10 மணிவரை சன நடமாட்டமும் இருந்தது.

அதிகமான கடைகள் திறந்திருந்தன

வாகனங்களின் நடமாட்டமும் அதிகரித்திருந்தது.

ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டதால் போக்குவரத்து சபையின் பஸ் சேவை முன்னர் நடைபெற்றது போல் இரவு 10 மணிவரை சேவையிலீடுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 84 நவம்பரில் ஊரடங்குச் சட்டம் யாழ். மாவட்டம் மற்றும் மன்னார், வவனியா, கிளிநொச்சி, திருகோணமலை மாவட்டங்களில் அமுல்செய்யப்பட்டிருந்தது. [மா]

## இலங்கையரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள இலங்கையர் பற்றி அந்நாடுகள் ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசனையை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ரா)

## சென்னை வானொலியில் தேவாரபண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இந்திய வானொலிச் சேவையின் சென்னை ஒலிபரப்பு நிலையத்திலிருந்து பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன,

அகில இலங்கை திருமறை மன்றத்தினர் விடுத்தவேண்டுகோளையடுத்தே இந்த ஒலிபரப்பை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழக ஆஸ்தான வித்துவான் கலைமாமணி தர்மபுரம் பி. சுவாமிநாதன் அவர்கள் இத்தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார்கள் தொடர்ந்து ஞாயிற்று கிழமைகளில் இரவு 8 மணிமுதல் 8-30மணி வரை இவ்வகுப்புக்கள் ஒலிபரப்பாகும்.


# றைபூனில் டபிள்யூ. பி. 70!

இது வெண்காயத்துடன் போட்டியிட்டு வளரும் சகல களைகளையும் முளைக்க முன்னரும், முளைத்த பின்னரும் சிறப்பாக கட்டுப்படுத்த ஹேகெம் ஸ்தாபனத்தாரினால் மீண்டும் சந்தைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இக்கலவை வெண்காயம் நட 2 நாட்களுக்கு முன்னர் தொடக்கம் முளைத்து 14 நாட்கள் வரை பயன்படுத்தலாம்.

விலை: 100 கி: 45/-

BAYER

ஹேகெம் லிமிட்டெட்

உங்கள் விநியோகஸ்தர்கள் :

யூனியன் ஏஜென்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், அந்தோனிப்பிள்ளை கட்டிடம், கிளிநொச்சி.

குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.

பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# நெடுங்கேணி பெரியகுளம் பகுதியில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் வீடுகளில் கொள்ளை!

## பல வீடுகள் தீக்கிரை

(கல்வியங்காடு)

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் கடந்த வெள்ளியன்று இரவு துப்பாக்கி, கத்தி கோடரி போன்ற ஆயுதங்களுடன் வந்த இனந்தெரியாத ஒரு கோஷ்டியினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து மக்களை விரட்டியபின் வீடுகளிலிருந்த உடமைகளை சூறையாடியதுடன் சில வீடுகளுக்குத் தீயும் வைத்துச் சென்றுள்ளனர்.

இத்தகைய அத்துமீறல்களை தடுத்து நிறுத்தும்படி வேண்டி வவனியா அரசாங்க அதிபருக்கு நெடுங்கேணி ஊஞ்சாற்கட்டி கிராமோதய சபைத் தலைவர் திரு. வி. அருளானந்தம் கடிதம் அனுப்பியுள்ளார்.

இக் கடிதப் பிரதிகள் ஜனாதிபதிக்கும் வவனியா உதவி அரசாங்கப் பிரிவு அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

பெரியகுளத்திலும் இதே போன்ற கொள்ளை நடந்திருக்கிறது. ஊர்மக்கள் பயத்தினால் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். விவசாய உபகரணங்கள் மட்டுமல்ல மிளகாய் போன்ற உணவுப் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

# போலி கல்விச் சான்றிதழ் ——— காண்பித்து வேலை பெற்றவர் பிடிபட்டார்

(கொழும்பு)

போலிக் கல்விச்சான்றிதழை காட்டி பொலிஸ்சேவையில் சேர்ந்த ஒருவர் கொழும்பு மோசடிப் பிரிவு பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இவர் போலி க. பொ. த. (சாதாரண) பரீட்சை சான்றிதழைக் காட்டி 1978-ம் ஆண்டு அளவில் சேவையில் சேர்ந்தார். தற்போது இவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பதினால் இவரது கல்விச் சான்றிதழ் பரிசீலனை செய்யப்படுவதற்காக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட போது இது கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து இவர் பிடிபட்டார்.

இதனைத் தொடர்ந்து இவர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இவர் மீதான வழக்கு நேற்று முன்தினம் கோட்டை நீதவான் ஜனாப் எஸ். ஐ இமாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளட்பட்டது. அச் சமயம் எதிரி பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் வழக்கை செப்டம்பர் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# அடவுகடை உரிமையாளர் வீட்டில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

இரு அடவு கடைகள் வைத்திருப்பவரின் வீட்டில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு காரைநகரிலுள்ள நீதிராசா என்பவரின் வீட்டில் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

இவருக்கு நீர்கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரு அடகு கடைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 12-30 மணியளவில் இனந்தெரியாத ஒரு கோஷ்டியினர், வீட்டின்கதவை உடைத்து உள்சென்று, அங்கிருந்த குடும்பத்தினரை துப்பாக்கிமுனையில் பயமுறுத்திவிட்டு பெண்கள் அணிந்திருந்த நகைகளையும், வீட்டுக்குள் வைத்திருந்த நகைகளையும் கொள்ளை அடித்துச் சென்றுவிட்டனராம்.

(மா)

---

# தாராள விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரின் 'மாக்பெட்' எரிபொருள் நிலையத்திலும். மணிக்கூண்டு வீதியிலுள்ள எரிபொருள் நிலையத்திலும் எதுவித கட்டுப்பாடுமின்றி நேற்று எரிபொருள் வழங்கப் பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட கார்களும், சுமார் 200 மோட்டார் சைக்கிள்களும். வரிசையாக தரித்துநின்று பெற்றோல் நிரப்பிச்சென்றன. (க)

---

# 'சமயத் தொண்டுகள் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தும்'

## தங்கம்மா அப்பாக்குட்டி பேச்சு

[ன் த்தரிப்பு]

'சைவ ஆலயங்களில் சிற்பக்கலை தனியிடம் வகித்து வருகின்றது கலை அழகையும், சமய வரலாற்றையும் இந்த சிற்ப அமைப்புகள் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன. கிராமப் பகுதிகளில்கூட சிற்பக்கலை அம்சங்கள் நிறைந்த ஆலயங்கள் உருவாகிவருவது எமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கின்றது''

இவ்வாறு சங்கானை குருபனை ஞான வைரவர் ஆலயத்தில் சிற்பவேலைகளை திறம்பட அமைத்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு வே. கந்தசாமிக்கு ஆலய பரிபாலன சபையினால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில்; சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

ஆசிரியர் சி. க. பேரம்பலம் தலைமையில்நடைபெற்ற இவ் விழாவில் சிற்பவேலைகளை சிறப்பானமுறையில் நிறைவேற்றியமைக்காக ஆசிரியர் திரு வே. கந்தசாமிக்கு ''ஆலய சிற்பக் கலாமணி'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''எமது சைவசமய ஆசிரியர்களில் பலர் பதவியிலிருந்து ஓடவு பெற்றபின்பு பல்வேறு சமயப் பணிகளில் ஈடுபட்டு வருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இவரது கலைப்பணி ஏனையவர்களுக்கு முன்மாதிரியானவையாக இருக்கின்றன. சமயத் தொண்டுகள் அதனை ஆற்றுபவர்களுக்கு ஆத்ம திருப்தியை ஏற்படுத்துகின்றன என்றார்.

---

# யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தின் 6வது பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி பல்கலைக் கழக வளவில் உள்ள கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் இப்பட்டமளிப்பு வைபவத்தை இம்மாதம் 22ம் திகதியே நடத்துவதென ஏற்கனவே தீர்மானித்திருந்த போதிலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் குறிப்பிட்ட திகதியில் நடத்த முடியவில்லை என்று பல்கலைக் கழக பதிவாளர் திரு. சிவராசா தெரிவித்தார்.

---

# இவர்களுக்கு விசேட பயிற்சி வழங்க அரசு முடிவு!

(கொழும்)

கல்லூரி அதிபர்கள், பிரதி அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர்களுக்கு விசேட பயிற்சி அளிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் நேற்று அமைசரவைக் கூட்டத்தை அடுத்து தமது அமைசில் நடத்திய பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்,

கல்விஅமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா இதுதொடர்பாக அமைச்சரவைக்குத் தெரிவித்திருந்த சிபார்சை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 20796 பேருக்கு விசேட பயிற்சி அளிக்கப்படஇருப்பதாக கல்வி அமைச்சர் அமைச்சரவைக்குத் தெரிவித்தார்.

---

# பூட்டானுக்கு ராஜீவின் விசேட தூதுவர்

(கொழும்பு)

பூட்டான் பேச்சுக்கள் மூன்றுவதுநாளாக தொடர்ந்து நடை பெற்றுவரும் இவ் வேளை இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் ஒருவர் அங்கு நேற்று பயணமாகியுள்ளார். இத்தகவலை இலங்கை அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத்துடன் இலங்கை இனப் பிரச்னைக்கு ஒற்றுமையான தீர்வொன்றுக்கு வரும்படி திரு. ராஜீவ்காந்தி இலங்கை தமிழ்க் குழுவினரை வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# மருந்துத் தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏறபட்டுள்ளது.

நெடுந்தீவு வைத்திய நிலையத்திற்கு தனியானதொரு வைத்திய அதிகாரி இருந்தும் மருந்துகள் இல்லாதது நோயாளருக்கு பலத்த ஏமாற்றமாகவுள்ளது.

---

# கத்திக்குத்து

[வவனியா]

வவனியா சின்னக்குளம் என்ற இடத்தில் 48 வயதான விவசாயி ஒருவர் கத்திக்குத்துககு இலக்காகி வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்கு அனுராதபுரம் அரசினர் மருத்துவமனைக்கு அம்புலன்சில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளார்.

---

# புதிய அதிபர்

[சுழிபுரம்]

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபராக திரு. எஸ். அருளானந்தம் இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# நீதிமன்றில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள டாக்டர் ஒருவரின் வேலைக்காரச்சிறுவன் ரவியின் மரண விசாரணை நாளை யாழ் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் தொடர்ந்து நடைபெறும்.

யாழ் நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கும் இவ்விசாரணையில், பொலிஸார் சாட்சிகளை ஆஜர் செய்வார்கள்.

கடந்த 3ம் திகதி மேற்படி சிறுவனின் சடலம் சில இளைஞர்களால்விசாரணைகாகயாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் சேர்க்கப்பட்டது தெரிந்ததே.

இச்சிறுவனின் சடலத்தை சட்டவைத்திய அதிகாரி என். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை செய்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்திலுள்ள முக்கிய சில உறுப்புகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. (க-மா)

---

# மரண அறிவித்தல்

## சிவசம்பு இராசரத்தினம்

தாவடி தெற்கைச் சேர்ந்தவரும் கோண்டாவில் மேற்கில் வசித்தவரும் முன்னால் உடுவில் கிராமசபை அங்கத்தவருமாகிய சிவசம்பு இராசரத்தினம் அவர்கள் அகாலமரணமானார். இவர் தாவடியைச் சேர்ந்த தந்தையா சிவசம்பு பார்வதிப்பிள்ளையின் மூத்த மகனும், நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் மோகனதாஸ், கஜேந்திரதாஸ் சுரஞ்சனா, முருகதாஸ் (ஜெர்மனி), சந்திரதாஸ், சூரியதாஸ் (Dilka Watch Works) குமரதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும். தயாபரனின் (பங்காளர் Venus Recording Bar) மாமனாரும், சுகந்தனின் பாட்டனும், சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம் (ஆசிரியர் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை), கமலாதேவி, இராசலட்சுமி (நீலா), இரத்தினேஸ்வரி (ஈசு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சங்கரசிவம்பிள்ளை (உரிமையாளர் யாழ்ப்பாணம் றேடிங் கொம்பனி பேணிச்சர் பலஸ்), நாகராசா (ஆசிரியர் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, நாகேஸ்வரன் சட்டக்கல்லூரிமாணவன்), மனோகரன் (மனேச்சர் Bayer Agro Chemicals கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது பூதவுடல் கோண்டாவில் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக தாவடி மயானத்துக்கு 11-07-85 வியாழக்கிழமை பகல் 12மணி அளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 4359

---

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை குலசேகரம்

கணபதிப்பிள்ளை குலசேகரம் காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும். சுருவில் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை செல்லம்மாவின் அன்பு மகனும், புங்குடுதீவு சின்னத்துரை அன்னம்மாவின் மருமகனும், சண்முகம், காலஞ்சென்ற தியாகராசா, செல்வராசா, கோபாலபிள்ளை சோதீஸ்வரி, துரைராசா, இராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும், புனிதவதி, திலகவதி, வசந்தகுமார், தெய்வகுமாரி ஆகியோரின் மைத்துனரும், மார்க்கண்டு, வேல்சாமி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது ஈமச்சடங்கு 11-7-85 வியாழக்கிழமை 2 மணியளவில் புங்குடுதீவு மணற்காட்டு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

[360]

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126